# பெருநகர சென்னை மாநகராட்சி
# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 85** **நாள்: 10.06.2016**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் அம்மா உணவகங்களில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணி அவர்கள் திடீர் ஆய்வு.**

---------

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் இன்று (10.06.2016) காலை பெருநகர சென்னை மாநகராட்சியில் தேனாம்பேட்டை மண்டலம், கோட்டம்–111 பகுதியில் கட்டப்பட்டு வரும் அம்மா உணவகத்தின் கட்டுமானப் பணிகளையும், ஆயிரம் விளக்கு பகுதியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திலும் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஏழை எளிய மக்கள் மலிவு விலையில் வயிறார உண்ணும் வகையில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே 300 அம்மா உணவகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அவற்றில், தேனாம்பேட்டை மண்டலத்தில் 18 கோட்டங்களில் 34 அம்மா உணவகங்கள் செயல்படுகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சியின் கோட்டம்–111 பகுதியில், வேலஸ் கார்டன் முதல் தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் அம்மா உணவகத்தின் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** கட்டுமானப் பணியினை 10 நாட்களுக்குள் விரைந்து முடித்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், ஆயிரம் விளக்கு பகுதியில் மாடல் பள்ளி சாலையில் உள்ள அம்மா உணவகத்தை பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கு உணவை சாப்பிட்டு, உணவு தரமாகவும், சுவையாகவும் இருப்பதாக பணியாளர்களிடம் தெரிவித்தார். பொது மக்களுக்கு உணவு வழங்கப்படும் முறையை ஆய்வு செய்து, அங்கு சாப்பிட்டு கொண்டிருந்த பொது மக்களிடம் உணவின் தரத்தினை பற்றி கேட்டறிந்தார். உணவை அருந்திக் கொண்டிருந்த பொதுமக்கள், அம்மா உணவகத்தில் அனைத்து உணவுகளும் மிகச் சிறப்பாக தயாரிக்கப்படுவதாகவும், தரமாகவும், சுவையாகவும் இருப்பதாகவும், குறைந்த விலையில் எங்களுக்கு பசியாற உணவு வழங்கும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி, ஆணையாளர் டாக்டர்.பி.சந்தரமோகன், இ.ஆ.ப., துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையர் டாக்டர்.சுபோத்குமார், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**